★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினசரி இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 8உ வியாழன் (23-8-56) ★ ★ வெளியூர்: ஆவணி 9உ வெள்ளி (24-8-56) [இதழ் 63

டில்லி பாலிக்கும் அருள்!

ரூ. 20-இலட்சம் செலவில் சென்னைக்கு 5 கிராமத் தொழில் முகாம்களாம்!

சென்னையில், 5 கிராமத் தொழில் முகாம்கள் அமைக்கப் போகிறார்களாம்!

இதற்காக டில்லி சர்க்கார் பெரும் கருணையோடு ரூ. 20 இலட்சம் ஒதுக்கி விட்டார்களாம்!

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலேயே தொகை ஒதுக்கித் தரப்படுகிறதாம்!

திட்டங்கள் இறுதிப் பரிசீலனையிலிருக்கின்றனவாம்!

வடவரின் ஓரவஞ்சனைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு!

பீகார், பஞ்சாப், வங்கமாநிலங்களுக்கு ரூ. 24 கோடி மானியம்

சென்னைக்குத் தம்பிடிகூடத் தரப்படவில்லை

ஆந்திராவிற்கு டெல்லி உதவ வேண்டுவது அவசியம்

சட்டசபையில் கோபால ரெட்டி கோரிக்கை

கர்னூல், ஆக. 22—

"ஆந்திர மாநில வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழுகிற தொகையை டில்லி உதவி செய்தாலன்றி சரிக்கட்டுவதென்பது சாத்தியமில்லை" என்று, முதன் மந்திரி கோபால் ரெட்டி எடுத்துரைத்திருக்கிறார்.

"இந்தியாவிலேயே இன்று மிகவும் பின்தங்கிய மாநிலமாக ஆந்திரம் தான் இருக்கிறது" என்பதை எடுத்துக்காட்டி, "சர்க்கார், டில்லியிடமிருந்து உதவி பெறுவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும்" என்றும் கோபாலர் கூறியிருக்கிறார்.

ஆந்திரா, சென்னையுடன் இணைந்திருந்த காலத்தில், 'சென்னை ஒரு முன்னேறிய மாநிலம்' என்று கூறி டில்லி சர்க்கார், உதவி ஏதும்—ஒரு தம்பிடி கூடத்தர மறுத்துவிட்டதற்காகக் கோபாலர் வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

கடன்கள் நீங்கலாக டில்லி, மேற்கு வங்கம், பிகார், ஒரிசா பஞ்சாப் முதலிய வடநாட்டு மாநிலங்களுக்கு ரூ 23 79,00000 மானியமாக வழங்கியது என்றும், அதே நேரத்தில் ஆந்திரம் உள்ளிட்ட சென்னைக்கு டில்லி எந்தவித உதவியும் வழங்கவில்லை என்றும் கோபால ரெட்டியார் தகவல் தந்திருக்கிறார்.

ஆந்திராவில் இப்போது கல்விக்காக நபர் ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 23; மருத்துவ வசதிக்காக ரூ. 0.5 மட்டுமே செலவிடப்படுவதாகவும் அவர் எடுத்துக்காட்டி டில்லி 'உதவிபுரிய' வேண்டியதின் அவசியத்தை சட்டசபையில் கோபால ரெட்டி வலியுறுத்தியிருக்கிறார்.

தென்னாட்டு மாநிலம் என்பதால், ஆந்திரத்திற்கு டில்லி உதவிபுரியுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியிருக்கிறது.

பட்டினி கிடக்கும் பம்பாய் முதல்வர்

உடல்நிலை பலவீனமாகியுள்ளதாம்

அகமதாபாத், ஆக. 22—

கடந்த ஞாயிறு முதல் பட்டினி கிடந்துவரும் பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய், தனது எடையில் 5 பவுண்டு இழந்து விட்டதாக, டாக்டர்கள் அறிவித்திருக்கின்றனர்.

அவர் பொதுவாக, இன்று பலவீனமடைந்திருப்பதாயும் கூறப்பட்டுள்ளது.

'எகிப்தைத் தாக்கினால் எண்ணெய் கிடைக்காது'

அமெரிக்காவுக்கு சவூதி அரேபிய மன்னர் எச்சரிக்கை?

பாரிஸ், ஆக. 22—

'சூயஸ் சிக்கலை ஒட்டி எகிப்து மீது மேற்கு வல்லரசுகள் ஆக்கிரமிப்பு யுத்தம் துவக்கினால், பாரசீகக் குடாவில் அமெரிக்க எண்ணெய் ஊறுகளுக்குப் 'பாதுகாப்புத் தரமுடியாது' என்று சவூதி அரேபிய மன்னர், அமெரிக்காவிற்கு எச்சரிக்கை அனுப்புவார் எனத் தெரியவருகிறது.

'சூயஸ் சிக்கலில், அமெரிக்கா, எகிப்திற்குச் சாதகமாக இருக்க வேண்டுமென்பதே சவூதி அரேபிய மன்னரின் விருப்பமாகும்' என்றும் கூறப்படுகிறது.

'அமைச்சரவைமுடிவைமாற்றதலைமை அமைச்சருக்கு உரிமை கிடையாது'

'மற்ற அமைச்சர்கள்போல் பிரதமருக்கு இருப்பதும் ஓரேஒரு வாக்குதான்'

இங்கிலாந்து நடைமுறையை எடுத்துக்காட்டி குன்சுரு விளக்குகிறார்

அமைச்சர் அவையின் ஒப்புதலைப் பெறாது, அமைச்சரவை செய்திருந்த முடிவிற்கு மாறுகப் பம்பாய் நகர் குறித்து வேறு முடிவை பிரதமர் அறிவித்தது, அமைச்சரவை நடைமுறைக்கு விரோதமானதாகும் என முன்னுள் நிதி அமைச்சர் தேஷ்முக், மக்கள் சபையில் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினார் அதற்கு பிரதமர் நேரு இதுவரை பொருத்தமான பதிலைக் கூறவில்லை. மீண்டும் அப்பிரச்சினை குறித்து டில்லி இராஜ்ய சபையில், மாநில சீரமைப்புக் குழு உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் குன்சுரு அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

"அது விஷயமாக நான் விரிவாக எதுவும் கூறப்போவதில்லை ஆனால், அரசாங்கம் எவ்வாறு செயல்படுகிறது என்பதும், அமைச்சரவை எவ்வாறு பணியாற்றுகிறது என்பதும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்க விஷயமாகும்

"இங்கிலாந்தில், அமைச்சரவையின் எந்த முடிவையும் தலைமை அமைச்சர் மாற்ற முடியாது. அமைச்சரவையில் அவருக்கு இருப்பது ஒரே ஒரு வாக்குதான்.

ஆனால் இங்கு, தலைமை அமைச்சருக்குள்ள செல்வாக்கு எத்தகையதாக இருந்தாலும், இங்கிலாந்தைவிட இங்குள்ள நிலைமை முழுவதும் மாறுபட்டதாகும் எனக் கூறமுடியுமா? தேஷ்முக் வெளியிட்ட தகவலிலிருந்து எழும் வினா, எதிர்கால மக்களாட்சி பற்றிய அடிப்படை முக்கியத்துவம் உடையதாகும். இந்தப் பிரச்சினையை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களே முக்கியமானதாகக் கருதி நடந்து கொள்ள வேண்டும்.

பம்பாய் நகர் விவகாரம்

"பம்பாய் நகர் குறித்து மராட்டியர்கள் அதிருப்தி கொண்டிருந்த நேரத்தில் நான், அந்த நகரம் மராட்டியத்தில் சேரவேண்டும் எனக் கூறினமைக்காக என்னை சிலர் குறைகூறி இருக்கிறார்கள். மாநில சீரமைப்புக் குழு உறுப்பினர்களுடன் சேர்ந்து நானும் பம்பாய் இருமொழி அமைப்பாகவே இருக்கவேண்டும் எனக் கருத்தளித்தேன்; ஆனால் அக்கருத்து புறக்கணிக்கப்பட்டு, அரசாங்கத்தால் ஒரு மொழி அமைப்பு அறிவிக்கப்பட்ட நிலையில், ஒரு புதிய நிலை உருவாகியது. எனவே, ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலையில் துளியும் தயங்காது, மராட்டிரத்திற்கு உள்ளடங்கிய நிலப்பரப்பான பம்பாய் நகர் மராட்டிரத்துடன் இணைந்தாக வேண்டும் என நான் வலியுறுத்தினேன்.

திரிபுரா—அசாம் இணைப்பு

திரிபுராவை தன்னுடன் இணைத்துக்கொள்ள அசாம் விரும்புவதாகவோ, அசாமுடன் இணைந்து கொள்வதைத் திரிபுரா விரும்புவதாகவோ கொள்வதற்குச் சான்றுகள் எதுவும் கிடையாது என அரசாங்கம் அறிவித்திருக்கிறது. திரிபுராவை தன்னுடன் இணைப்பதை அப்பகுதி மக்கள் விரும்பினால், வரவேற்பதாக மிக மிக விளக்கமாக அசாம் அரசாங்கம் அறிவித்திருக்கிறது விந்தியப் பிரதேசம், ஆஜ்மீர், டில்லி போன்ற மாகாணங்களைக் குறித்து முடிவு கட்டுவதில், 'சி' வகுப்பு மாகாண மக்களின் கருத்தறிய இந்திய அரசாங்கம் எந்தவித முயற்சியையும் மேற்கொள்ளவில்லை இருந்தாலும், திரிபுராவை அசாமுடன் இணைக்கவேண்டும் என்ற குழுவின் கருத்தைப் புறக்கணித்து விட்டதை நியாயமெனக் காட்டுவதற்காக இந்த வாதத்தை இந்திய அரசாங்கம் கூறியிருக்கிறது.

226 கல்லூரி மாணவர் உண்ணாவிரதம்

அகமதாபாத், ஆக 22—

மகா குஜராத் மாநிலம் கோரியும், இரு மொழி பம்பாய் மாநில அமைப்பை எதிர்த்தும் 226 கல்லூரி மாணவர்கள் இன்று காலை உண்ணாவிரதம் துவக்கியிருக்கின்றனராம்.

சட்டக் கல்லூரி மைதானத்தில் உண்ணாவிரதம் துவக்கியிருக்கும் இவர்களில் 99 பேர் மூன்று நாட்களுக்கு உண்ணாவிரதம் இருப்பர் என்றும், எஞ்சியவர்கள் ஒருநாள் அடையாள விரதம் இருப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சுமார் 1,000 பேர் ஒரு நாளைக்கு அடையாள உண்ணாவிரதமிருப்பதற்குத் தயாராகவிருப்பதாக மகா குஜராத் சமிதிக்குத் தகவல் தந்திருக்கின்றனராம்.

தேர்தலில் நேசவாளர் ஆதரவைப் பெற புதிய குட்டிக்கரணம்!

விசைத்தறித் திணிப்பை த. நா. கா. செயற்குழு எதிர்க்கிறதாம்!

பவானி, ஆக. 22—

இங்கு கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில், விசைத்தறித் திணிப்பை எதிர்த்துப் பலர் பேசினர் எனத் தெரியவருகிறது. இவ்வெதிர்ப்பை அகில இந்தியக் காங்கிரஸ் குழுவிற்கு அறிவிக்கும் பொறுப்பு த. நா. கா. குழுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது எனவும் அறியக்கிடக்கிறது.

கூட்டத்தில் அமைச்சர்களான காமராசர், சுப்பிரமணியம், பக்தவத்சலம், பரமேசுவரன் ஆகியவர்கள் கலந்துகொண்டனர்.

தனி அழைப்பின்மீது செயற்குழு உறுப்பினர்களாக இல்லாத மாவட்ட காங்கிரஸ் தலைவர்களும், செயலாளர்களும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

வருந்துகிறோம்

நாஞ்சில் தோழர் கி. மனோகரன் அவர்களது தந்தையார் திரு. கிருஷ்ணன் வைத்தியர் அவர்கள், 19-8-56-ல் நெய்யாற்றின்கரையில் உள்ள தமது இல்லத்தில் இரவு சுமார் 2 மணிக்கு இயற்கை எய்திய சோகச்செய்தியை மிக வருத்தத்துடன் அறிவிக்கிறோம்.

தந்தையை இழந்து வருந்தும் தோழர் மனோகரன் அவர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களை உரித்தாக்குகிறோம்.

(ஆ-ர்)

300 மருத்துவக் கல்லூரி மாணவர்கள் வேலைநிறுத்தம்

கோரிக்கைகளுக்காக நடவடிக்கை

மைசூர், ஆக. 22—

'கல்லூரியை அபிவிருத்தி செய்ய வேண்டும்' என்ற தங்கள் கோரிக்கையை ஏற்க சர்க்கார் மறுத்துவிட்டதின் விளைவாக, மைசூர் ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கடந்த திங்கள் முதல் வகுப்புகளுக்குச் செல்லாமல் அமைதியாக 300 பேர்களே வேலைநிறுத்தம் செய்து வருகின்றனராம்.

'கோரிக்கை ஈடேறும் வரை வேலைநிறுத்தம் நடைபெறும்' என்று மாணவர் சங்க செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

ஆந்திர ஆற்றிலிருந்து சென்னைக்கு தண்ணீர்!

கோதாவரி ஆற்று நீரை கிருஷ்ணா நதியில் திருப்பி விடுவதற்கான யோசனை குறித்து டில்லி சர்க்கார் பரிசீலித்துக் கொண்டிருப்பதாக, ஆந்திர உதவி முதன் மந்திரி என். சஞ்சீவி ரெட்டி சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

கோதாவரி நீரை கிருஷ்ணா நதிக்குத் திருப்புவதற்குக் காரணம், அந்த நீர் சென்னை மாநிலத்திற்குப் பயன்படச் செய்வதற்காகத்தான் என்று கூறப்படுகிறது.

நம் நாடு

சென்னை 23-8-'56 வியாழன்

அனுமந்தையா வெளியேற்றம்!

இந்தியத் துணைக்கண்டத்தின் மக்களின் நலனுக்காக பாடுபடுகிற கட்சி, பாடுபடுகிற ஆற்றல் பெற்றுள்ள கட்சி காங்கிரஸ் ஒன்றே ஒன்றுதான் என அதன் தலைவர்கள் கூறிக் கொண்டு வருகிறார்கள்.

காங்கிரஸ் கட்சி ஒன்றுதான், சேவா உணர்ச்சி உடைய தலைவர்களைக் கொண்டு இயங்கும் கட்சி என்றும் அதன் தலைவர்கள் செப்பித் திரிகிறார்கள்.

சிறந்த அடிப்படையும், உயர்ந்த செயல் முறையும் கொண்டு விளங்கும் கட்சியாகத் தங்கள் கட்சி ஒன்றுதான் இருந்துவருவதாகவும், காங்கிரஸ் தலைவர்கள் காலந்தவறாது பொக்கம் பேசி வருகிறார்கள்.

நாடாளும் பண்பு, நிர்வாகத் திறமை, தங்கள் கட்சியின் பிறப்புரிமையாகும் எனவும், காங்கிரஸ் கனவான்கள் பீத்திக் கொண்டு வருகிறார்கள்.

வறுமையை விரட்டி, துன்பத்தைத் துடைத்து, வளத்தையும் நல்வாழ்வையும் ஒருங்கே உருவாக்கி அமைக்கும் பேராற்றல், தங்கள் கட்சியின் தனிச் சிறப்பு எனவும், காங்கிரஸ் தலைவர்கள் வீராப்பாகச் சொல்லி வருகிறார்கள்.

உலக அமைதியை நிலைநாட்டவும், உலக அரசுகளிடை எழும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதிலும் தங்கள் கட்சியின் ஏகபோகத் தலைவருக்கு இருந்துவரும் ஆற்றலும், அபார திறமையும், வேறு எவருக்கும் கிடையாது எனவும் காங்கிரஸ் கட்சியினர் கொக்கரித்து வருகின்றனர்.

உலகம் உய்ய, ஒற்றுமையுடன் வளர்ந்தோங்க அரிய வழிகாட்டியாக பஞ்சசீலக் கோட்பாட்டை உற்பத்தி செய்த பெருமையும் தங்கள் தனிப்பெரும் தலைவருக்கே உண்டு எனவும் காங்கிரஸ் நாப்பறைகள் தினம் தினம் அறைவித்து வருகின்றன.

இத்தகு பொருந்தா பிரசாரத்திற்குச் சாதகமாக, காங்கிரஸ் கட்சியின் முற்கால சேவை முன்வைக்கப்படுகிறது.

காங்கிரஸ் நடத்திய விடுதலைப் போராட்டம் அதற்கு ஆதாரவாக எடுத்துக்காட்டப் படுகிறது.

இயல்பாக அதனிடம் இல்லாத இலட்சணத்தையும் அதற்குச் சூட்டி, புழுத்துக் கிடக்கும் குறைபாடுகளை திரையிட்டு மூடி, அமைப்பு பலம், நேர்மை திறம், ஆளும் ஆற்றல் ஆகிய அனைத்துக்கும் காங்கிரஸ் கட்சியே இருப்பிடம்—சிறப்பிடம் எனப் பேசி, மக்களை மயக்கி வருகின்றனர் காங்கிரஸ் கட்சியினர்.

தம் காங்கிரஸ் கட்சியைப் பாராட்டிப்புகழும் அதே நேரத்தில், மற்ற எதிர்க்கட்சிகளை இழித்துப் பேசவும் காங்கிரஸ் தலைவர்கள் தவறுவது கிடையாது.

எதிர்க்கட்சிகள் என இருக்கும், கட்சிகள் அப்பெயருக்கேற்ற செயல்முறை கொண்டதாக விளங்கவில்லை எனக் குற்றஞ்சாட்டுகின்றனர் அந்தக் குணவான்கள்.

எதிர்க்கட்சிகளுக்குத் திட்டமில்லை எனக் குறை கூறுகின்றனர்.

எதிர்க்கட்சிகளுக்குத் திட்டமிருந்தாலும், அதை நிறைவேற்ற வேண்டும் என்ற நல்லெண்ணம் கிடையாது எனக் குற்றஞ்சாட்டுகின்றனர்.

எதிர்க்கட்சிகளுக்குத் தக்க திட்டமும், அதை நிறைவேற்றுவதற்கான நல்லெண்ணமும் இருந்தாலும், அதற்குத் தேவைப்படும் ஆற்றல் கிடையாது என இறுதியாக முடித்து விடுகின்றனர்.

எதிர்க்கட்சியினர் சேவா உணர்ச்சி துளியும் இல்லாதவர்கள்—இப்படியும் காங்கிரஸ் கட்சியினர் தூற்றிவருகின்றனர்.

எதிர்க்கட்சியினர் பதவி வெறிகொண்டு அலைகின்றனர்—இவ்வாறும் பழிசுமத்துகின்றனர் பதவி பாசம் துறந்த காங்கிரஸ் துறவிகள்!

மாற்றுக் கட்சியினர் கைகளுக்கு ஆட்சி மாறினால், ஏழ்மை எரிமலை வெடிக்கும்; இல்லாமை மண்கம்பம் தோன்றும்; பஞ்சப் புயல் ஏற்பட்டு விடும்; எங்கும் நாசம் நர்த்தனமாடும்—என மக்களை அச்சுறுத்துகின்றனர் காங்கிரஸ் பரோபகாரிகள்.

காங்கிரஸ் கட்சியினரின் பொய்ப்பிரசாரத்தில் மறைந்து கிடக்கும் உண்மை சிந்தித்து உணரத்தக்கதாகும்.

அவ்வாறு ஆராய்ந்து அறியத்தக்க ஆற்றல் நேற்று மக்களுக்கு இல்லாமல் இருந்திருக்கக்கூடும்; இன்றோ, அந்த பாழ்பட்ட நிலை இல்லை.

மக்கள் அரசியல் தெளிவு பெற்று வருகின்றனர்—அதுவும் தீவிரமாக மக்களிடம் காணப்படும் தெளிந்த அறிவு, காங்கிரஸ் கட்சியில் இருந்து வரும் உள்ளடிக் குழப்பத்தை காணத்தவறாது.

மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா அவர்கள், முதலமைச்சர் பதவியிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப் பட்டதற்கு என்ன காரணம்—நியாயம் கூறுகின்றனர்—காங்கிரஸ் மேலிடத்தார்?

அவர் மீது நம்பிக்கை இல்லை என மைசூர் மாவட்ட சட்ட சபை காங்கிரஸ் கட்சி கூறிற்று.

அவர்மீது நம்பிக்கை இல்லை எனக்கூறிய மைசூர் சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் கடமை, அவ்வாறு குற்றஞ்சாட்டுவதுடன் முடிவடைந்து விடவில்லை.

தனது குற்றச்சாட்டிற்குரிய காரணங்களை, அந்த சட்டசபை காங்கிரஸ் கட்சி விளக்கமாக அறிவித்திருக்க வேண்டும்.

அவ்வாறு அறிவித்ததா? தனது நம்பிக்கையின்மைக்குரிய நியாயங்களை ஒன்றொன்றாக அடுக்கிக் காட்டியதா?

இல்லை—மூக்காலும் இல்லை.

அனுமந்தையா முதலமைச்சராக இருப்பது தங்களுக்குப் பிடிக்கவில்லை; அவருக்குப் பதிலாக வேறு ஒருவரை அந்தப் பீடத்தில் அமர்த்த சட்டசபை உறுப்பினர்கள் பலர் விரும்பினர்; அவ்வளவுதான்; அவர் மீது நம்பிக்கை இல்லை எனத் தீர்மானிக்கின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது.

அனுமந்தையாவிற்கு நாடாளத் தெரியவில்லை—இப்படி குற்றஞ் சுமத்தி அவர் மீது நம்பிக்கை இல்லை எனக் கூறவில்லை மைசூர் சட்டசபை காங்கிரஸ் கட்சி.

அனுமந்தையா சொந்தக்காரர்களுக்கு சலுகை காட்டினார்; எனவே நம்பிக்கையற்றவராகி விட்டார்—இவ்வாறு நியாயம் கூற முன்வரவில்லை மைசூர் காங்கிரஸ்.

அனுமந்தையா இலஞ்சம் வாங்கினார்; எதேச்சாதிகாரியாக நடந்துகொண்டார்; காங்கிரஸ் கொள்கைக்கு மாறாக செயல்பட்டார்; இப்படி ஒரு குற்றத்தையும் சுமத்தி, அவர் மீது தங்களுக்கு நம்பிக்கை போய்விட்டது எனத் தெளிவாகப் பேசவில்லை மைசூர் காங்கிரஸ்.

இவ்வாறு குற்றஞ் செய்யாத ஒருவரை விரட்டியடிக்கும் பதவிவெறி கொண்டலையும் ஒரு கட்சியைத்தான், ஆளும் பேராற்றல் பெற்ற கட்சி எனக் காங்கிரஸ் தலைவர்கள் பீத்தித் திரிகிறார்கள்!

பதவிகளுக்காக ஒருவர் கழுத்தை ஒருவர் அறுக்கும் பயிற்சியையே, சென்ற ஒன்பது ஆண்டுக் காலமாகப் பெற்று வருவதில் தேர்ந்துள்ள கூட்டத்தினர்தான், தங்களை நேர்மையில் நாட்டமுடையவர்கள் எனவும், நீதிக்குப் போராடும் பண்புடையவர்கள் எனவும், ஆளும் திறம்படைத்தவர்கள் எனவும், பஞ்சசீலக் கோட்பாட்டை உருவாக்கினவர்கள்என்றும் ஒப்பாரிவைத்து வருகின்றனர். வெட்கம்! வெட்கம்!

அனுமந்தையா அவர்கள் வெளியேற்றப்பட்டது காங்கிரஸ் கட்சியின் பதவி வெறிக்கு ஒரு எடுத்துக்காட்டு—அதுவும் சிறந்ததோர் எடுத்துக்காட்டு எனக் கூறுவது மிகையாகாது.

காங்கிரஸ் நிலை குறித்து அனுமந்தையா,

"கர்நாடகக் காங்கிரஸ் கட்சிக்குள் இப்பொழுது ஒன்பது கோஷ்டிகள் உள்ளன; அவை, ஒன்றோடொன்று அதிகாரத்திற்கு அடித்துக்கொள்ளுகின்றன. விரிவாக்கப்பட்டுள்ள மைசூர் மாநிலத்திற்கு இது மகிழ்ச்சிகரமான துவக்கமாக இருககாது."

இவ்வாறு கூறுகிறார்.

காங்கிரசின் உண்மையான நிலையை அறிந்துகொள்வதற்கு இதைவிட சான்று வேறு வேண்டுமா?

'சுருக்கம்' ஏற்படாத புதியரகத் துணிகள்!

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தயாரித்திருக்கிறார்களாம்

வெப்பப் பிரதேச நாடுகளில் உபயோகிக்கக்கூடிய புதிய துணிரகங்களை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் தயாரித்திருக்கிறார்கள்.

ஹெலிகான் சிபீயா என்ற இந்த ரகத் துணிகள் பருத்தியினாலானவை; இவை சுருங்காது; சுருக்கத்தை நீக்க 'இஸ்திரி' போட வேண்டிய அவசியமுமில்லை; இவற்றின் விலையும் மலிவு!

தேவிகுளம், பீர்மேடு, செங்கோட்டை பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டும்

மாநிலங்கள் சபையில் அத்தி பூக்கிறது

புதுடில்லி, ஆக. 21—

இப்போது திரு-கொச்சி மாநிலத்தில் இணைந்திருக்கும் செங்கோட்டைத் தாலுகா சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மாநிலங்கள் சபையில், சென்னை மாநிலத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. டி. வி. கமலசாமி என்பார் எழுப்பியிருக்கிறார்.

மாநிலங்கள் சபையில் நடைபெற்ற மாநிலப் புனரமைப்பு மசோதா விவாதத்தில் கலந்து கொண்ட அவர், பெரும்பான்மையினரான தமிழ்மொழி பேசும் மக்களைக்கொண்ட தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் சென்னை மாநிலத்துடனேயே இணைக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இப்பகுதிகள் பல நதிகள் பாயும் பிரதேசமாக இருக்கிறது என்றும், அப்பகுதிகளில் எல்லாம் பாயும் நதிகளின் தண்ணீர் எவ்விதப் பிரயோசனமுமில்லாமல் வீணாக அரபிக்கடலில் விழுகிறது என்றும், அந்த நதிகளின் குறுக்கே அணைகள் கட்டி, தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தால் தமிழ் நாட்டில் பெரும் நிலப்பரப்பிற்கு நீர்ப்பாசன வசதிகள் கிடைக்குமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநில புனரமைப்பையொட்டி இந்திய சர்க்கார், செங்கோட்டைத் தாலுகாவின் ஒரு பகுதி சென்னை மாநிலத்திற்கும், மற்றொரு பகுதி திரு-கொச்சி மாநிலத்திற்கும் சேர வேண்டுமென முடிவுகட்டியிருக்கிறது.

செங்கோட்டைத் தாலுகாவிலுள்ள புளியாரா பகுதியும் திரு-கொச்சி மாநிலத்துடன் இணைக்கப்படுவதை, தமிழ் நாடு உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்திருக்கின்றனர்.

இன்றிருக்கிற நிலைமை என்னவென்றால், இந்தப் புளியாரா பகுதிகளும் திரு-கொச்சி மாநிலத்துடன் இணைக்கப்படுகின்றன என்று தி. கொ. சர்க்கார் வெளியிட்ட அறிக்கையினால், சென்னை சர்க்கார், ஏற்கனவே தி. கொ. சர்க்காருக்கு மாற்றப்பட்டப் பகுதிகளைவிட மேலும் இரு மடங்குப் பகுதிகளை இழக்கவேண்டிய நிலையில் இருக்கிறது; அதுவும் குறிப்பாக, அந்தத் தாலுகாவின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சில மலைப் பகுதிகளை சென்னை மாநிலம் இழக்கவேண்டியிருக்கிறது என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

ஊழியர்களுக்காக 65,000 வீடுகள்

ரூ. 35 கோடி செலவில் இரயில்வே நிர்வாகம் கட்டித்தருமாம்

புதுடில்லி, ஆக 20—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்திய இரயில்வே நிர்வாகம், தனது ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தருவதற்கென நாடு முழுமையிலும் 65 000 வீடுகள் கட்டித்தருவதென முடிவு செய்திருக்கிறதாம்.

கட்டப்படும் வீடுகளில் 1000-த்திற்கு 8 வீடுகள் வீதமே, இரயில்வே அதிகாரிகளுக்குத் தரப்படுமாம். மற்ற வீடுகள் அனைத்தும் இரயில்வே துறை 3-வது, 4-வது வகுப்பு ஊழியர்களுக்கு விடப்படுமாம்

இந்த வீடுகள் முழுவதும் கட்டி முடிப்பதற்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 35 கோடி என்று மதிப்பிடப்பட்டிருப்பதாகவும், இந்தச் செலவுத் தொகை அனுமதியும், பலதரப்பட்ட இரயில்வே வட்டாரங்களில் நிறுவப்படுவதென உத்தேசிக்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கையும் இன்னும் முடிவாகத் தீர்மானிக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

கதிர் இயக்கத் தாதுப் பொருள்கள்

திரு-கொச்சி கடற்கரையில் கிடைப்பதாகத் தகவல்

புதுடில்லி, ஆக. 21—

'யுரேனியம்', 'தோரியம்' போன்ற கதிர் இயக்கத் தாதுப் பொருட்கள், திரு-கொச்சி மாநில, மலபார் மாவட்டக் கடற்கரைப் பகுதிகள் பலவற்றில் கிடைப்பதாக மக்கள்சபையில் பிரதமர் நேரு கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தத் தாதுப் பொருட்கள் குறிப்பாக எந்தெந்த இடங்களில் எல்லாம் கிடைக்கின்றன என்ற விபரங்களைப் பொதுமக்கள் நலனை முன்னிட்டு இப்போது வெளியிட முடியாதெனவும் அவர் மறுத்திருக்கிறார்.

பெப்சு சட்டசபை முன்பு ஆர்ப்பாட்டம்

பாடியாலா, ஆக 21—

சர்தார் கியான்சிங் ரேர்வாலாவும், மற்றும் அவருடன் 8 பேரும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து கொண்டதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக பாடியாலா மாவட்ட அகாலி தள உறுப்பினர்கள் உள்பட 50 அகாலி தளத் தொண்டர்கள், பெப்சு சட்டசபைக்கு எதிராகக் கூடி நின்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தினதாகத் தெரியவருகிறது.

சுதந்திரப் போரில் ஈடுபட்ட 'முக்கிய'த் தலைவர்கள்

வாழ்க்கை வரலாறு வெளியிட சர்க்கார் உத்தேசம்

ரெய்பூர், ஆக 21—

இந்தியாவின் 'சுதந்திரப் போராட்டத்தில் சிறைத் தண்டனை பெற்று, சிறைவாசம் அனுபவித்தத் தங்கள் மாநிலத்தைச் சேர்ந்த சில 'முக்கிய' அரசியல் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய சிறு சிறு புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுவதென மத்தியப் பிரதேச மாநில சர்க்கார் தீர்மானித்திருக்கின்றனராம்.

இந்தத் தகவலை வெளியிட்ட மாநில போலீஸ் இலாகா இன்ஸ்பெகடர்-ஜெனரல் ஷகானி, அந்தந்தத் தலைவர்கள் சிறைகளில் இருந்தபோது, அவர்களுடைய பெயர், மற்றும் விவரங்கள் சேகரிக்கப்பட்ட கற்கள் ஏற்கனவே அந்தச் சிறைச்சாலைகளில் வைக்கப் பட்டிருக்கின்றன என்றும் இப்போது மாநில சர்க்கார் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் புத்தக உருவில் வெளியிட முன்வந்துள்ளதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறைவாச காலத்தில் அந்தத் தலைவர்கள் தங்கள் நேரத்தை எந்த வகையில் கழித்தார்கள் என்பது பற்றிய விவரங்கள் அப்புத்தகங்களில் விளக்கப்படும் என்றும், சிறையில் வைக்கப்பட்டிருக்கும் கைதிகள், தாங்கள் விடுபட்டு வெளியே போன பிறகு எப்படி எப்படி ஒழுங்கு முறையுடன் நடந்துகொள்வார்களோ அது போலவே சிறைவாச காலத்திலும் எப்படி நடந்துகொள்வது என்பது குறித்து அவர்களுக்கு ஒரு படிப்பினையாக அது அமையும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'தாய் மொழிக்கு உழைத்தோர் நமது வழிகாட்டிகளாவர்'

வேதநாயகம் விழாவில் சி. பி. சிற்றரசு

சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில் நடைபெற்ற வேதநாயகம் நினைவுவிழாப் பொதுக்கூட்டத்தில் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"வேதநாயகம் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; ஏராளமான கருத்துக்களை நமக்கெல்லாம் தந்து சென்றவர்; அவர் 63 ஆண்டுகள் 9 மாதங்கள் 10 நாட்கள் வாழ்ந்திருக்கிறார். சராசரி இந்தியனின் வாழ்நாள் 25 ஆண்டுகள்தான்; ஆனால், வேதநாயகம் அவ்வளவு நாள் வாழ்ந்திருப்பது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியதாகும்.

"வேதநாயகத்தின் இந்த விழாவை நாம் கொண்டாடாவிட்டால், அவர் நமது கனவில் வந்து நின்று, 'ஏன் கொண்டாடவில்லை?' என்று கேட்கமாட்டார்; ஆனால் நம்மால் மதிக்கப்படவேண்டிய அத்தகைய மேதைகளின் விழாவை நமக்கு நாமே உரமேற்றிக்கொள்ள — பாதை அமைத்துக்கொள்ளக் கொண்டாடுகிறோம்.

"வேதநாயகம் ஒரு விளக்கு போல! தாகத்தோடு இருப்பவனுக்குக் கிடைக்கும் தண்ணீரைப்போல! எதிர்பார்க்காமலே வந்து உதவுகிற மழையைப் போல! நாம் விரும்பாவிட்டாலும் அறிவு ஒளி தருகிறவர் அவர்! அவரைப் போலவேதான் மொழிக்கென உழைத்தோர் அனைவரும் நமக்கு வழிகாட்டிகளாகிறார்கள்!

"மேதை பெர்னார்ட்ஷா தான் இறந்தபொழுது, தனது உயிலில், ஆங்கில மொழியின் எழுத்துக்கள் 26-ஐ 40-ஆக ஆக்குவதற்கெனப் பல இலட்ச ரூபாய்களை ஒதுக்கி வைத்துவிட்டுச் சென்றார். 14 எழுத்துக்கள் புதிதாகக் கண்டுபிடிக்க இயலாத அறிஞர்கள் அந்தப் பணத்தை வேறு காரியங்களுக்குச் செலவிடத் துணிந்தபோது ஆங்கில நாட்டு மக்கள் எதிர்த்தார்கள். 'எழுத்துக்களைப் புதிதாகக் கண்டுபிடிப்போர் வரும்வரை பணத்தைச் செலவிட்டுவிடாதீர்கள்—எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் சரி' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள்.

"எதற்காக நான் இதனைக் குறிப்பிடுகிறேனென்றால், அந்த நாட்டவர்களுக்கு மொழியின்மீது எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுவதற்குத்தான்.

"நம்மவர்களிடத்தில்—தமிழர்களிடத்தில் அத்தகு மொழி உணர்ச்சி இல்லை. இசை முழுவதும் ஒரு காலத்தில் தியாகராச கீர்த்தனையாகவே இருந்தது; பிறகுதான் பல வேதநாயகங்கள் வந்து ஓரளவு மாற்றி அமைத்துள்ளார்கள்.

"தமிழின் தனித் தன்மையை உயர்வை - வளத்தை - நம்மைவிட மேல்நாட்டார் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். இராஸ் பாதிரியார், 'ஒரு தமிழன் தூங்குகிறான்' என்று தமது கல்லறையில் எழுதச் சொன்னார்! 'தமிழுக்கு ஈடு இணையான மொழி எதுவுமில்லை; தமிழ் தனித்து இயங்கும்' என்று கால்டுவெல் சொன்னார்!

"இங்கே ஒரு மொழி வளர்ச்சிக் கழகம் உருவாவதற்கும் அங்கே ஒரு மொழி வளர்ச்சிக் கழகம் உருவாவதற்கும் ஏராளமான வித்தியாசங்கள் இருக்கின்றன! உறுப்பினர் எண்ணிக்கை இங்கு வரவரக் குறைந்து கொண்டேபோகும்; அங்கு கூடிக்கொண்டேபோகும்!

'வேதநாயகம் நல்ல தமிழராகவும், நீதிமானாகவும் வாழ்ந்தார்; இதனை அவரது வரலாறு முழுமையையும் அறிந்தோர் அறிந்திருப்பர்.

"நாம் அறிவியக்கத்தைச் சேர்ந்தவர்கள்; எதை வேண்டுமானாலும்—இராமாயணத்தைக்கூட படி என்பவர்கள்; படித்துச் சிந்தித்து நியாயம் என்று பட்டதை எடுத்துக் கொள்ளச் சொல்கிறோம்.

"தமிழர்களுக்குத் தமிழ் உணர்வு வேண்டும்; ஒவ்வொரு தமிழரும் குறளைக் கையில் வைத்திருப்பதை கடமையாக—கட்டாயமாக—முக்கியமாகக் கருதவேண்டும்."

அயன்புரம் கூட்டத்தில் சம்பத்

நாட்டு நிலை குறித்து விளக்கம்

சென்னை அயன்புரம் 21-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், 20—8—56 இரவு 7 மணியளவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மார்க்கெட் மைதானத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்குத் தோழர் கே. வீராசாமி தலைமை தாங்கினார்.

பின்னர் தோழர் வி. எஸ் கோவிந்தராசன் சிறிது நேரம் பேசினார்.

இறுதியாகத் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், அரசியல் நிலைகளைத் தெளிவாக எடுத்துரைத்து, கழகம் தேர்தலில் ஈடுபடுவதின் நோக்கத்தைச் சிறப்புற விளக்கினார்.

செயலாளர் நன்றிகூற, தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. (ந. கி.)

விரைவில் முடிவுகள் செய்யப்படுமா?

சென்னை—கேரள மாநில எல்லைகளில் அமைந்திருக்கும் செங்கோட்டைப் பகுதிகளைப் பிரிவினை செய்வது குறித்து விரைவிலேயே முடிவுகள் தெரிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறதாம்.

மத்திய சர்க்காரிலுள்ள தலைவர்களிடம் நிலப்படம், மற்றும் புள்ளி விவரக் குறிப்புகளுடன் இது குறித்து விவாதித்ததில், இப்போது சென்னை மாநிலத்திற்குச் சாதகமாகவே முடிவுகள் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

'போன' உயிர் திரும்பியது!

மெல்போர்ன், ஆக. 21—

சில மணி நேரத்திற்குள் மருத்துவமனையைவிட்டு வெளியேறக் கூடிய நிலையிலிருந்த ஒரு பெண்மணியை, அவள் இறந்துவிட்டதாகக் கூறி பிரேத அடக்கம் செய்ய அனுமதி கொடுத்தாராம் டாக்டர் ஒருவர்!

44 வயதுடைய ஷீலா பால்க் என்ற மாது ஒருவர், இங்குள்ள தெரு ஒன்றில் திடீரென விழுந்து விட்டதாகவும், உடனே டாக்டர் ஒருவர் அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று பரிசோதித்து அவர் இறந்துவிட்டதாகத் தெரிவித்து, நகரிலுள்ள கல்லறைக்கு அனுப்பிவைத்தாராம். அங்கு நின்றிருந்த போலீஸ்காரர் அம்மாதுவை குளிர் பெட்டிக்குள் வைக்கும்போது அவர் உயிரோடு இருப்பதற்கான அறிகுறிகள் கண்டு, உடனே அவரை மறுபடியும் மருத்துவமனைக்கு அனுப்பினாராம்.

மருத்துவமனைக்குத் திருப்பி எடுத்துச் செல்லப்பட்ட அப்பெண்மணி மீண்டும் 'உயிர் பெற்று' சில மணி நேரத்திற்குள் மருத்துவமனையைவிட்டுத் திரும்பியிருக்கிறார்!

சட்டம் கொண்டு வருவார்களாம்!

சென்னை, ஆக. 18—

"இதுவரை நடைபெற்று வந்துள்ள சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டபூர்வமானவையாக்க, சர்க்கார் தானாகவே ஒரு சட்டம் கொண்டுவரும்," என்று, சென்னை சட்டசபையில் அமைச்சர் சுப்பிரமணியம் அறிவித்திருக்கிறார்.

அமைச்சரின் இந்த அறிவிப்பை யொட்டி, சபையில், தாம் கொண்டுவர இருந்த தனி உறுப்பினர் பிரேரபணையைத் திரு ரங்கசாமி அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார்.

சுயமரியாதைத் திருமணங்கள் செல்லாதென உயர்நீதி மன்றத் தீர்ப்பு வெளியாகி 3 ஆண்டுகள் ஆகிவிட்டன என்றும், இத்தீர்ப்பினால் 19 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றத் திருமணங்கள் கூடப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்றும், எனவே, வருகிற செப்டம்பரில் சட்டசபை மீண்டும் கூடுகிறபோதாவது இந்த சட்டத்தைச் சர்க்கார் கொண்டு வரவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

நேட்டீரா சேதி!

ஜப்பான் சர்க்கார், 'கருச்சிதைவை'ச் சட்டபூர்வமாக்கி அதை அனுமதித்திருக்கின்றதாம்!

இப்போது அங்குள்ள மருத்துவர்களே [illegible] சிகிச்சைமூலம் கருவைச் சிதைத்து வருகின்றனராம்!

கடந்த இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பின்னர் இதுவரை, ஜப்பானில் ஒரு இலட்சம் குழந்தைகளின் கருக்களை சிதைக்கப்பட்டுள்ளனவாம்.

'குழந்தைக் கருச்சிதைவு'ப் பாவத்திற்குப் 'பிராயச்சித்த'மாக, கருச் சிதைந்துபோன உயிர்களின் 'ஆத்ம சாந்தி'க்காக, ஜப்பானில் உள்ள ஒரு ஆலயத்தில் 'விசேடப் பிரார்த்தனை' நடைபெற்றதாம்!

44 நாட்கள் பட்டினி நோன்பு இருந்தவர்

மயக்கமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்

லண்டன், ஆக. 20—

கடந்த 44 நாட்களாக ஒரு கண்ணாடி சவப்பெட்டிக்குள் உண்ணாவிரதம் இருந்துவந்த ஆங்கில பக்கீர் பிளாண்டினி என்பார், இன்று மயக்கமுற்றுவிட்டாராம். உடனே அவர் மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

65 நாட்களுக்கு உண்ணாவிரதம் இருப்பதெனத் தீர்மானித்து பிரிக்டன் எனுமிடத்தில் அவர் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தாராம்

'மகா குசராத் தினம்' மேற்கொள்ளப்படும்?

ஒரு தனி மாநிலம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதென மகா குசராத் பரிஷத்தின் செயற்குழுக் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

மேலும் அந்தச் செயற் குழு, குசராத் மக்களை வருகிற 24-ந் தேதியன்று 'மகாகுசராத் தினம்' கொண்டாடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளதாம்!

காங்கயன்—மங்கம்மாள் திருமணம்

அண்ணா தலைமை வகித்துச் சிறப்பித்தார்

சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், மத்திய செயற்குழு உறுப்பினரும், அறிவியக்கத் தலைவர்களில் ஒருவருமான பேளுக்குறிச்சி ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் குமாரன் திரு. காங்கயன் அவர்களுக்கும், பேளுக்குறிச்சி மிட்டாதார் வி. சுப்பராயனார் அவர்களின் குமாரத்தி மங்களம் அம்மையாருக்கும் 19-8-56 காலை 10 மணிக்கு பேளுக்குறிச்சி மணமகன் இல்லத்தில், அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் பல கட்சிப் பிரமுகர்களும், மணமக்களின் பெற்றோர் உறவினரும், விவசாயப் பெருங்குடி மக்களும் ஏராளமாகத் திரண்டிருந்தனர்.

திருமணப் பந்தல் அமைப்பு ஒரு மாவட்ட மாநாட்டுக் கொட்டகைப்போலவும், நிகழ்ச்சிகள் மாவட்ட மாநாட்டினைப்போலவும் காட்சியளித்தனவென்று கூறின் மிகையாகாது.

திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் அண்ணா அவர்களையும், வந்திருந்த மற்ற அனைவரையும் வரவேற்று திருமணத்தை நடத்தி வைக்கும்படி அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

சீர்திருத்தத் திருமணத்தைக் குறித்து அண்ணா அவர்கள் விளக்கம் தந்து, காங்கயன்—மங்கம்மாள் திருமணத்தை இனிது முடித்து வைத்தார்.

பின்னர் மணமக்களைப் பாராட்டித் தோழர்கள் அ. பொன்னம்பலனார், டி. கிருஷ்ணமூர்த்தி எம். எல். ஏ., பேராசிரியர் தசரதன், எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ., இராசாராம் பி. ஏ., கே. வி. கே. இராமசாமி, ஈ. ஆர். கிருஷ்ணன், கரூர்-வடிவேலு, கே. எஸ். சுப்பிரமணியனார், ஏ. கோ. ப. சுப்பிரமணியம், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன்' பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மணமக்களுக்கு பல கிளைகளின் சார்பிலும், நண்பர்கள், உறவினர்களின் சார்பிலும் ஏராளமான வாழ்த்திதழ்களும், அன்புப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

மணமக்களை வாழ்த்தி கழகத் தோழர்களிடமிருந்தும், மற்றப் பிரமுகர்களிடமிருந்தும் வந்திருந்த செய்திகளை சேலம் ஏ. சித்தையன் அவர்கள் வாசித்தார்.

இறுதியாக அண்ணா அவர்கள் தமது முடிவுரையில் மணமக்களை வாழ்த்தும் முகத்தான் கருத்து விருந்தளித்தார்கள்.

பின்னர் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் அனைவருக்கும் நன்றி நவில, விருந்துபசாரம் நடைபெற்றது.

இத்திருமண விழாவிற்கு சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து வந்திருந்த ஆயிரக்கணக்கான பாட்டாளி மக்களையும் திரு. ஜி. பி. சோமசுந்தரம் அவர்கள் மனமார உபசரித்தார்கள்.

காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சிப் பிரமுகர்களும் திருமணவிழாவில் கலந்து கொண்டனர்.

★

சீனிவாசன்—சிவபாக்கியம்

இராசிபுரம் தி. மு. கழகப் பொருளாளர் தோழர் ஏ. சீனிவாசன்—தோழியர் சிவபாக்கியம் அம்மையார் திருமணவிழா, 19-8-56 காலை 8 மணிக்கு இராசிபுரம் மணமகன் இல்லத்தில் இனிது நடந்தேறியது; ஏராளமான கழகத் தோழர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இத்திருமண விழாவினை அண்ணா அவர்கள் தலைமை வகித்து நடத்திக் கொடுத்ததுடன், மணமக்களைப்பாராட்டிக் கருத்துரை வழங்கினார்கள். தொடர்ந்து தோழர்கள், அ. பொன்னம்பலனார், ஈ. ஆர். கிருஷ்ணன், கே. வி. கே. இராமசாமி, துணைப்பொதுச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

உள்ளூர் தி. மு. கழகத்தினரும் நண்பர்களும் மணமக்களுக்கு வாழ்த்திதழ்களும் அன்பளிப்புகளும் வழங்கினர்.

இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி —பொறுப்பாளர்.

★

வெங்கடாசலம்-செல்லம்மா

இராமநாதபுரம்—புதூரில், தோழர் துரைசாமி அவர்கள் தலைமையில், தோழர் ஆர் வெங்கடாசலம்—தோழியர் செல்லம்மாள் திருமணம், 19–8–56 காலை 11-மணிக்கு நடைபெற்றது. தோழர் அ பொன்னம்பலனார் திருமண நிகழ்ச்சியை நடத்திவைத்து, மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்.

மணமக்கட்கு தோழர்கள் பலர் வாழ்த்து மடல்களும் பரிசுகளும் வழங்கினர்.

மணமக்கள் சார்பில் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

தி. மு. க. தேர்தல் நிதியளிப்பு

மதுரை வடக்கு மாசி வீதியிலுள்ள மறுமலர்ச்சிக் கழகத்தின் சார்பில், 29-7-56-ல் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தின்போது, தி மு கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 5 தரப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

• • •

தெ ஆ மாவட்டம் ஆயிபுரம் க. நா. இராமகிருட்டிணன் அவர்கள் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்கென ரூ. 2 அனுப்பியுள்ளார்—பெற்றுக்கொண்டோம் — நன்றி —பொறுப்பாளர்.

'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பு

ஆயிபுரம் தோழர் க. நா. இராமகிருட்டிணன் அவர்கள் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அனுப்பியுள்ளார். பெற்றுக்கொண்டோம் - நன்றி-பொறுப்பாளர்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள் :

★

ஆக. 25 : சென்னை—சேத்துப்பட்டு

26 : காலை-திருக்கழுக்குன்றம்
பிற்பகல்-காஞ்சீபுரம்
மாலை- செங்கற்பட்டு

27 : தேனாம்பேட்டை

29 : சென்னை பஸ் தொழிலாளர் சங்கபொதுக் கூட்டம்

★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி :

மத்திய செயற்குழு

(Working Committee)

★

9—9—56 ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை —இராயபுரம் 'அறிவக'த்தில், தி. மு. கழக மத்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறும்.

★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★

'நம்மவராம் — நல்லவராம்'

'ஆனால் நாடு கண்ட பலன் என்ன?'

சேலம் சிறப்புக் கூட்டத்தில் அண்ணா கேள்வி

20—8—56 திங்கள் காலை 10 மணிக்கு சேலம் நகர திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், அம்பிகா டாக்கீசில் சிறப்புக் கூட்டமொன்று நடைபெற்றது.

தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தோழர் பி. முத்துசாமி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். தலைவர் முன்னுரையில் தி. மு. கழகத்தின் கொள்கைகளையும் கழகத்தைக் காமராசர் தூற்றிப் பேசுவதைப் பற்றியும் எடுத்துப்பேசினர்.

பின்னர் தோழர் அ. பொன்னம்பலனர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சிபற்றிப் பேசினர்.

அடுத்து, துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் காங்கிரஸ் ஆட்சி தமிழர்களுக்கு எந்த அளவில் கேடு விளைவித்து வருகிறது என்பது பற்றியும், அடுத்துவரும் தேர்தலில் கழகத்தோழர்களின் கடமை என்ன என்பது பற்றியும் விளக்கிப் பேசினர்.

இறுதியில் அண்ணு அவர்கள் நாட்டு நிலையையும் கழகம் தேர்தலில் ஈடுபடுவது பற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நகர கழகத் துணைச்செயலாளர் ஈ. ஏ. ஆர். இரங்கநாதன் நன்றி கூறினர்.

கூட்டத்திற்கு தாய்மார்கள் உட்பட ஏராளமானேர் வந்திருந்தனர்.

இறுதியாக அண்ணு அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரமாவது :—

"விடுமுறையில்லாத நாளாகிய இன்று சிறப்புக் கூட்டம் நடத்துவதையும், அவ்வாறிருந்தும் கூட ஏராளமான மக்கள், கட்டணம் கொடுத்து வந்திருந்து கூட்டத்தைச் சிறப்பிக்கும் விவரங்களையும் எனக்கு முன் பேசிய தோழர்கள் தங்கள் பேச்சுக்களின்போது குறிப்பிட்டார்கள். அவர்கள் கூறிய காரணங்களோடு நான் தெரிந்துகொண்ட மற்ளுெரு உண்மையையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

"அடுத்து நடைபெறவிருக்கும் பொதுக்குழுக் கூட்டத்தைச் சேலத்தில் நடத்தவேண்டும் என்று பொதுச்செயலாளருக்கு வேண்டுகோள் விடுத்து, அனுமதியும் பெற்றுவிட்டனர். பிறகு அக்கூட்டத்திற்குச் செலவாகும் பெருந்தொகைக்கு என்ன செய்வதென்று யோசித்து, அதற்கும் எங்களைக் கொண்டே பணம் வசூல் செய்யத் திட்டமிட்டு அதில் வெற்றியும் பெற்ற சேலம் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் ஆற்றலையும், ஆர்வத்தையும் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இன்று வசூலான பணத்தில் இக்கூட்டச் செலவு போக மிகுதி அனைத்தும் பொதுக்குழுவிற்காகச் செலவிடப்படுமென்று செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் அவர்கள் தெரிவித்ததைக் கேட்டு நானும், எனது தோழர்களும் நன்கொடை கொடுத்து உதவிய நீங்களும் உண்மையிலேயே மகிழ்ச்சியடைந்திருக்கிறேம்.

"எனக்கு முன்பு பேசிய நண்பர் என். வி. நடராசன் அவர்கள், இக்கூட்டத்தில் தேர்தல் பற்றி விரிவாகப் பேசினர்; இன்று நாட்டை ஆளுபவர்கள் செய்துள்ள கொடுமைகளை எடுத்து விளக்கினர்.

"ஆனல், இந்த அமைச்சர் குழுவின் முதல்வரான காமராசரை நம்மவர் என்றும், ஆதலாலே நல்லவர் என்றும் அதற்காக நாம் அனைவரும் அவரை ஆதரிக்க வேண்டுமென்றும் மிகப் பெரியவர்கள் கூறுகிருர்கள்!

"சென்னை சர்க்காரின் முதலமைச்சரான காமராசர் நல்லவராகவும் இருக்கலாம்; நான் அதனை மறுக்கவும் இல்லை. நம்மவர்களில் ஒருவர் என்றுகூட வேண்டுமானுலும் ஒப்புக்கொள்கிறேன். இதைப் பற்றி விவாதம் செய்யவேண்டியது அவசியமென்றுகூட நான் கருதவில்லை.

"காமராசர் நம்மவர்—ஆதலாலே நல்லவர் என்று கூறுபவர்கள், அந்த நல்லவரால் நம் நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்ன—மக்கள் அடைந்த பயன்தான் என்ன என்பவைகளைக் கூற முடியுமா? அவ்விதம் கூறுவார்களேயானல் மிகச் சாமானியமான நானும், நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த விவரங்களை மனமார ஏற்றுக்கொள்வதில் தயங்காது என்று கூறுகிறேன்.

"காமராசர் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று இதுவரை சாதித்தவைகள் என்ன? விவரம் கூறட்டும். 'தமிழர் ஒருவருக்குப் போலீஸ்இலாகாவில் மிகப் பெரிய உத்தியோகம் தரப்பட்டதே' என்று கூறலாம்; அவ்விதம் உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்றவர் ஏதோ சாதாரண கான்ஸ்டபிளாயிருந்து, காமராசரால் திடீரென இன்ஸ்பெக்டர் — ஜெனரலாக ஆக்கப்படவில்லை; அந்தத் தகுதியை இன்று அல்லது நாளை பெறக்கூடிய நிலையிலிருந்தவரேயல்லாது ஏதோ போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு இவர் முதலமைச்சரானவுடனே மிகப் பெரிய உத்தியோகம் தரப்பட்டதைப் போலக் கருதி அதன் மூலம் காமராசர் எவ்வளவு நல்லவர் பார்த்தீர்களாயென்று பேசுவது காமராசரையே கேலி செய்வதாகும். தமிழர்களில் ஓரிருவருக்குப் பெரிய உத்தியோகம் தரப்பட்டுவிட்டதாலேயே அந்த இலாகாக்களில் பணியாற்றும் ஏராளமான ஏழை—நடுத்தர மக்களின் வாழ்வு கடுகளவாவது உயர்ந்திருக்கிறதா என்று கேட்கிறேன்.

"காமராசர் ஆட்சியில் உழவர்களுக்காவது மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதா என்ருல் அதுவும் இல்லை. அதற்கு ஆச்சாரியா வினேபா பாவே அவர்களே சாட்சியமாக விளங்கி வருகிருர்.

"நான்கு பிள்ளை பெற்றவர்—அதிலும் அந்தப் பிள்ளைகளில் ஒருவர் டாக்டர்; மற்ளுெருவர் வக்கீல்; இன்ளுெருவர் எஞ்சினீயர்; மற்றவர் தாசில்தார் — என்ற உயர்ந்த அந்தஸ்திலிருந்தும், பெற்ற தகப்பனர், சோற்றுக்கு ஊர்க்கோடியிலுள்ள சத்திரத்தை நாடிச் செல்லவேண்டுமென்ற நிலையிருந்தால் அந்தப் பிள்ளைகளின் இலட்சணத்தை எதற்கு ஒப்பிடுவது? அதைப்போலத்தான் காங்கிரஸ் ஆட்சியில் உழவர்களுக்கு நல்வாழ்வு இல்லை. ஆட்சி செய்பவர்களால் உழவர்கள் ஏமாற்றப்படுகிருர்கள் என்பதைத்தானே ஆச்சாரிய வினேபா பாவே அவர்களின் நிலதான யாத்திரை எடுத்துக் காட்டுகிறது?

"உழவர்களுக்கு உண்மையிலேயே நல்வாழ்வு கிட்டவேண்டும் என்ற எண்ணம் காமராசருக்கு இருக்குமானுல், நிலச் சீர்திருத்தச் சட்டத்தை நடைமுறையில் கொண்டுவருவதற்குத் தயக்கம் ஏன் என்று கேட்கிறேன். இவர் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவராவிட்டாலும் சும்மா இருந்து காலத்தைக் கடத்தி இருக்கலாம்; ஆனல், 'நிலச் சீர்திருத்தச் சட்டம் வரப்போகிறது, வரப்போகிறது' என்று ஊர்தோறும் சொல்லிவருவதால் நிலப்பிரபுக்கள், நிலச்சட்டம் வந்தால் எந்தெந்த வகையில் அந்தச் சட்டத்திலுள்ள சந்து பொந்துகளில் தாங்கள் மறைந்துகொண்டு தங்கள் ஆதிக்கத்தைத் தொடர்ந்து செலுத்திவரலாம் என்ற முயற்சிகளில்தான் தற்பொழுது ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே, 'நிலச் சட்டம் இதோ வருகிறது; அதோ வருகிறது' என்று காமராசர் சர்க்கார் ஆசைகாட்டுவது, பெரும் நிலப்பிரபுக்களுக்குச் சாதகமாகவும், அவர்கள் தங்கள் உலுத்த வாழ்வைக் காப்பாற்றிக்கொள்ள முன்னெச்சரிக்கையாகவும் உள்ளதே அல்லாமல், ஏழை உழவர்களுக்கு யாதொரு நன்மையும் ஏற்படவில்லை என்பதையும் பகிரங்கமாகக் கூறுகிறேன்.

"படித்த மாணவர்களுக்காவது வேலை கிடைத்ததா என்ருல், முன்பிருந்ததைவிட வேலையில்லாத் திண்டாட்டம் அதிக அளவில் தலைவிரித்தாடுகிறது என்பதை காங்கிரஸ்காரர்களே ஒப்புக்கொள்கிருர்கள்.

"இவைகளெல்லாம் தொலையட்டும்; நம் தாயகத்தை மீட்கவும் அல்லது நம் தமிழகத்திற்கு உரித்தான பகுதிகள் பறிபோகாமல் தமிழகத்தோடு இணைக்கவும் ஆன முயற்சிகளிலாவது காமராசருக்கு அக்கரை—ஆற்றல் இருக்கிறதா என்ருல், தேவிகுளம், பீர்மேடு பிரச்சினைகளிலிருந்தே அந்த உண்மை உங்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

"எனவே, இவ்விதத் திறமைகளில்லாத ஒருவர் நம்மவராயிருந்தால்தான் என்ன? அல்லது நல்லவராய்த்தான் இருந்தால் என்ன? அதனுல் நாட்டு மக்களுக்கு எவ்வித நன்மைகளை எதிர்பார்க்க முடியுமென்று கேட்கின்றேன்.

"நல்லவர்; அதற்காக நாம் ஆதரிக்கவேண்டும்—என்று கூறப்படுமானுல், காமராசரைவிட இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு ஆயிரம் மடங்கு நல்லவர் என்பதை நாடே அறிந்ததுதான்; அதுமட்டுமல்ல; அவருக்கு உலகனைத்தும் பெரிய கீர்த்தியும் ஆதரவும் இருந்து வருகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை அந்தக் கீர்த்தியாலும் புகழாலும் இந்தியத் துணைக்கண்டத்துக்கோ நமக்கோ ஏதாவது பயனுண்டா என்ற பிரச்சினையில் வேறுபாடுகள் இருக்கமுடியுமே தவிர, 'ஜவகர்லால் நேரு மிகவும் நல்லவர்' என்பதில் யாருக்கும் வேறுபாடு இருக்கமுடியாது. ஆகவே, ஜவகர்லால் நேரு நல்லவர் என்பதற்காக நாம் அவரை ஆதரிக்கலாமா? ஆதரிக்க முடியுமா என்பதை அந்தப் பெரியவர்கள் உணருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

"காமராசர் நம்மவர்—நல்லவர் என்று போற்றும் திராவிடக் கழகத்தார், இந்தியை எதிர்க்கின்ருர்கள்; ஆனல் காமராசரோ, 'இந்தியை சிலர் எதிர்க்கின்ருர்களாமே—அது ஏன் என்று விளங்கவில்லை?" என்று கேட்கிருர்; ஆனல், 'பச்சைத் தமிழர் காமராசர் இந்தியை ஆதரிக்கிருரே, அது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை?' என்று பெரியாரும் கூறுகிருர்; நம்மவர்—நல்லவர் என்ற சொந்தமும் பந்தமும் பாசமும் எவ்வாறு இருக்கிறது பார்த்தீர்களா?

"காமராசர் நம்மவர் என்ருல், திராவிட கழகத்தார் அவரைப் 'பச்சைத் தமிழர்' என்று போற்றுகிருர்களே, அவர் என்றைக்காவது தன்னைத் 'திராவிடர்' என்று கூறியுள்ளாரா? அல்லது திராவிடர் கழகக் கொள்கைகளைத்தான் ஏற்று எங்காவது பேசியிருக்கிருரா? தன்னை 'இந்தியன், இந்தியன்' என்றேதான் கூறிக்கொண்டு வருகிருர்; 'இந்தி தேவை தேவை' என்றுதான் பேசுகிருர்; 'சென்னைக்குத் தமிழ் நாடு என்ற பெயர் தேவையில்லை; சென்னை என்றேதான் இருக்கவேண்டும்' என்றேதான் கூறிக்கொண்டு வருகிருர்; ஆகவே, இவரை நம்மவர் என்று எந்த உரிமையில் ஏற்றுக்கொள்ள முடியும்— ஏற்றுக்கொள்ளும்படி சொல்வது? எந்த வகையில் பொருத்தமாகும்? — என்று அந்தப் பெரியவர்களைக் கேட்கிறேன்!

"வேண்டுமானுல் 'காமராசர் ஒரு யூகசாலி' என்று கூறலாம். தனக்குக் கிடைத்துள்ள பதவியையும், அதிகாரங்களையும் காப்பாற்றிக்கொள்ள யார் யாரை எப்படி எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதில் மிகவும் யூகசாலியாக இருக்கலாம்; ஆனல் நேர்மையான அரசியல் வாழ்வை மதிப்பவர்கள் இப்படிப்பட்டவர்களை, 'நம்மவர்—நல்லவர்' என்று ஏற்றுக் கொள்ள முடியாது அல்லவா?

"ஆச்சாரியார் முதலமைச்சராயிருந்தபோது, கலெக்டர் பதவியிருந்த ஒரு தமிழரைத் தமக்குச் சொந்த காரியதரிசியாயிருக்கும் பதவிக்கு உயர்த்தி அவர் காலத்திலேயே அதைவிடப் பெரும் பதவியையும் அடையும்படி செய்தார்; ஆதலால் அவர் செய்த தவறுகளையெல்லாம் நாம் ஆதரித்தோமா?

"ஆச்சாரியார் உணவுக் கட்டுப்பாட்டை ரத்துசெய்தார்—நாம் அதற்காக அவரைப்பாராட்டினேம். பின்னர் குலதர்மக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்தார்—அவரது ஆட்சியின் குரல்வளையையே பிய்த்தெறிந்தோம்—அவரையல்ல! ஆகவே, ஆட்சிபீடத்திலிருப்பவர்கள் நம்மவர்களா—நல்லவர்களா என்பது மட்டும் பிரச்சினையல்ல; நாட்டு மக்களின் வாழ்வை மலரச்செய்யும் ஆற்றலும், அறிவும் படைத்தவர்களா என்பதையே நாம் எண்ணிப்பார்க்கவேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகம் இந்த அடிப்படையிலேதான் இந்த நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் சொந்த விருப்பு வெறுப்புக்காகவோ, அல்லது தனிப்பட்ட சில உதவிகளுக்காகவோ நமது தாயகத்தின் தன்மானத்தையும் மக்களின் வாழ்வையும் பறிகொடுக்கும் நடவடிக்கைகளில் இதுவரை ஈடுபட்டதுமில்லை—இனியும் ஈடுபடாது.

"இன்னும் சொல்லப்போனுல், ஆச்சாரியார் முதலமைச்சராயிருந்த சமயத்தில்தான் சென்னை நகர் பிரச்சினையில், அது தமிழர்களுக்கே உரித்தானது என்ற நமக்கு சாதகமான முடிவு வந்தது; ஆனல், 'நம்மவர்—நல்லவர்' என்று மிகப்பெரியவர்கள் போற்றுகிருர்களே, அந்தக் காமராசர் ஆட்சியில்தான் தமிழர்களுக்கு உரித்தான தேவிகுளம—பீர்மேடு போன்ற பகுதிகள் பறிபோயிற்று. தமிழகத்திற்கு இவ்விதப் பெரும் துரோகம் செய்தவர்கள்தாம் நல்லவர்களாம்—அதிலும் நம்மவர்களாம்!

"ஆதலாலே, அன்புள்ள தோழர்களே! அடுத்த பிப்ரவரி திங்களில் தேர்தல் நடைபெறுவது உறுதியானுல், அத்தேர்தலில் தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் பெருங் கேடுகளை விளைவித்து வருபவர்களுக்குப் பொதுமக்களாகிய நீங்கள் தக்க பாடம் கற்பிப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு,"

என்று, அண்ணு அவர்கள் தமது சொற்பொழிவில குறிப்பிட்டதோடு, மற்றும் இந்திய அரசியலாரின் ஏகாதிபத்தியப் போக்கினை விவரித்தும், கண்டித்தும் பேசினர்.

கழகக் கூட்டம்

★

சென்னை—சைதை :

பழைய மாம்பலம் ஈஸ்வரன் கோயில் தெரு

23-8-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர் :
எஸ். இராசவேல்

பேசுபவர் :
சி. பி. சிற்றரசு

★

விழுப்புரம் :

மந்தகரை மைதானம்

24—8—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர் :
ஈ. வெ. கி. சம்பத்

'வேதநாயகர் விழா'

24—8—56 பிற்பகல் 3-30 மணிக்கு, சென்னை தூய இராயப்பர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின் சார்பில், வேதநாயகர் விழா, பள்ளிப் பூங்காவில், புலவர் கி. தியாகராசன் தலைமையில் நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

'பேச்சுக் கலை'

24-8-56 மாலை 6 மணியளவில், சென்னை—எஸ்பிளனேட் ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில், பட்டிமன்றச் சார்பில், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் 'பேச்சுக் கலை' என்னும் பொருள் பற்றிப் பேசுவார். தோழர் நாரணதுரைக் கண்ணான் அவர்கள் தலைமை தாங்குவார்.

தாராபுரம் தாலுகா ஆரம்பஆசிரியர் ஐக்கிய சங்க முதல் மாநாடு

24—8—56-ல், தாராபுரம் ஜவுளிக்கடை வீதியிலுள்ள ஷாதிமகாலில், திரு. என். நல்லசேனுபதி எம். எல். சி. அவர்கள் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும். முதலமைச்சர் காமராசர் மாநாட்டைத் திறந்துவைப்பார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.